TAMILTH Tanjavur 1 Regional_02 G SURESH 223106 50415

TRICHY

லா.ச.ராமாமிர்தம்: லால்குடியைச் சேர்ந்தவர் என்பதால் தன்னுடைய பெயரை லால்குடி சப்தரிஷி ராமாமிர்தம் என்பதன் சுருக்கமாக லா.ச.ரா என்ற பெயரில் எழுதிவந்தார். புத்ரா, பாற்கடல், அபிதா, பச்சைக்கனவு, ஓர் எழுத்தாளனின் உரத்த சிந்தனை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

ராஜம் கிருஷ்ணன்: முசிறியில் பிறந்தவர். தற்காலத்திய பெண் எழுத்தாளர்களிலும், பெண்ணியச் சிந்தனையாளர்களிலும் குறிப்பிடத்தக்கவர். குறிஞ்சித்தேன், கருப்புமணிகள், கூட்டுக்குஞ்சுகள், மலர்கள் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

சின்னச் சின்னதாய்

காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற கல்லூரி தின விழாவில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் இஷிதா ராட்டி.

வேளாண் கல்லூரி தின விழா காரைக்கால் ஆட்சியர் பங்கேற்பு

காரைக்கால்

காரைக்கால் மாவட்டம் செருமாவிலங்கை பகுதியில் உள்ள புதுச்சேரி அரசு கல்வி நிறுவனமான பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கல்லூரி தின விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

மாணவர் மன்ற ஆலோசகர் ஏ.எல்.நாராயணன் வரவேற்புப் பேசுகையில், கல்லூரி மாணவர்களின் திறன்கள் குறித்து எடுத்துக் கூறினார். கல்லூரி முதல்வர் ஆர்.சங்கர், மாணவர் மன்றத்தின் முக்கியப் பங்கு மற்றும் அதன் செயல்பாடுகள், கல்லூரியின் சிறப்புகள் குறித்து விளக்கிப் பேசினார். விழாவில் இந்த ஆண்டுக்கான மாணவர் மன்ற பொறுப்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். காரைக்கால் ஆட்சியர் இஷிதா ராட்டி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பேசினார்.

தொடர்ந்து, கல்லூரி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில், கல்லூரி பேராசிரியர்கள், பணியாளர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். நிறைவாக மாணவர் மன்ற இணைச் செயலாளர் ஜி.சுப்ரியா நன்றி கூறினார்.

திருக்குவளை தியாகராஜ சுவாமி கோயிலில் நேற்று நடைபெற்ற தேரோட்டம்.

திருக்குவளை தியாகராஜ சுவாமி கோயில் பிரம்மோற்சவ தேரோட்டம்

நாகப்பட்டினம்

திருக்குவளை தியாகராஜ சுவாமி கோயிலில் வைகாசி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு நேற்று தேரோட்டம் நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் கலந்துகொண்டு வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள சப்தவிடங்க தலங்களில் ஒன்றான தியாகராஜ சுவாமி கோயிலில் வைகாசி பிரம்மோற்சவ விழா மே 12-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தருமபுரம் ஆதீனத்தின் அருளாசியுடன் நடைபெற்று வரும் இந்த விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இதையொட்டி, அலங்கரிக்கப்பட்ட தேரில் தியாகராஜ சுவாமி எழுந்தருள ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர். 4 வீதிகள் வழியாக வலம் வந்த தேருக்கு பக்தர்கள் வீடுதோறும் அர்ச்சனை செய்து வழிபட்டனர். சிவ வாத்தியங்கள் முழங்க பாரம்பரிய கிராமிய கலை நிகழ்ச்சிகள், சிலம்பாட்டத்துடன் தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை நாட்டிருப்பு குத்தகை விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் கிராம மக்கள் செய்திருந்தனர்.

இரிஞ்சியூர் செல்லமுத்து மாரியம்மன் கோயில் விழாவில் தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்.

இரிஞ்சியூர் செல்லமுத்து மாரியம்மன் கோயில் வைகாசி தீமிதி திருவிழா

நாகப்பட்டினம்

நாகை மாவட்டம் கீழ்வேளூரை அடுத்த இரிஞ்சியூர் கிராமத்தில் உள்ள செல்லமுத்து மாரியம்மன் கோயிலில் வைகாசி திருவிழா மே 22-ம் தேதி பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. தொடர்ந்து, அம்மனுக்கு அபிஷேக, ஆராதனை, காவடி, மாவிளக்கு, அம்மன் வீதியுலா ஆகியவை நடைபெற்று வந்தன.

முக்கிய நிகழ்ச்சியான தீமிதி திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், விரதமிருந்து காப்புக்கட்டிய ஏராளமான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தீ மிதித்து, தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். தொடர்ந்து, அம்மனுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டு, வீதியுலா நடைபெற்றது. இதில், சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த திரளான பக்தர்கள் பங்கேற்று, சுவாமி தரிசனம் செய்தனர்.

பனங்குடி சிபிசிஎல் நில எடுப்பில் பாதிப்புக்குள்ளான

அனைவருக்கும் இழப்பீடு கோரி மக்கள் மறியல்

2 கி.மீ. தொலைவுக்கு அணிவகுத்த வாகனங்கள்

நாகப்பட்டினம்

பனங்குடி சிபிசிஎல் நில எடுப்பில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அனைவருக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தி பாதிக்கப்பட்டோர் சார்பில் நாகூர் அருகே வாஞ்சூரில் நேற்று சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனமான சிபிசிஎல் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் ஆலை விரிவாக்கத்துக்காக, மத்திய அரசால் ரூ.31,500 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 620 ஏக்கர் நிலங்கள் விவசாயிகளிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டன. நில உரிமையாளர்கள், குத்தகை சாகுபடிதாரர்கள், விவசாய கூலிகளுக்கு மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வு இழப்பீட்டுத் தொகையாக தலா ரூ.5 லட்சம் வழங்க 2,163 குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, சிபிசிஎல் நிறுவனம் தமிழக அரசிடம் நிதியை ஒப்படைத்துள்ளது.

இந்நிலையில், மறுவாழ்வு மற்றும் மீள் குடியமர்வு இழப்பீட்டுத் தொகையை முறையாக வழங்க வலியுறுத்தி புதுச்சேரி-தமிழக எல்லையான வாஞ்சூர் ரவுண்டானா பகுதியில் பாதிக்கப்பட்ட பயனாளிகள் 500-க்கும் மேற்பட்டோர் நேற்று 4 மணி நேரத்துக்கும் மேலாக சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, விவசாயிகளை தமிழக அரசு ஏமாற்றுவதாக குற்றம்சாட்டி முழக்கங்களை எழுப்பினர். மேலும், குறைந்த அளவிலான பயனாளிகளுக்கு மட்டும் இழப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்பட்டு வருவதாகக் கூறியதுடன், ஏற்கெனவே கணக்கு எடுக்கப்பட்ட அனைத்து பயனாளிகளுக்கும் தொகையை உடனே தமிழக அரசு அதிகாரிகள் வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த மறியல் காரணமாக நாகை- சிதம்பரம், நாகை- கும்பகோணம் சாலைகளில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு, 2 கி.மீ. தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. தகவலறிந்த நாகை டிஎஸ்பி ராமச்சந்திர மூர்த்தி தலைமையிலான போலீஸார் அங்கு சென்று, போராட்டத்தில் ஈடுபட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதில் உடன்பாடு ஏற்படாததால், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் அனைவரையும் போலீஸார் கைது செய்து, தனியார் மண்டபத்தில் தங்க வைத்து, பின்னர் விடுவித்தனர்.

நாகை மாவட்டம் வாஞ்சூர் ரவுண்டானா பகுதியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்.

பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பால் ஏமாற்றம்

கீழ்வேளூரில் விவசாயிகள் வயலில் இறங்கி போராட்டம்

நாகப்பட்டினம்/ கும்பகோணம்

தமிழக அரசின் பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறி, முதல்வர் விஜய்க்கு கண்டனம் தெரிவித்து கீழ்வேளூரில் விவசாயிகள் நேற்று வயலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழகத்தில் 14.22 லட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர்க் கடன் தள்ளுபடியை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன்படி, ரூ.50,000 வரை கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு மட்டும் முழுமையாகவும், அதற்கு மேல் கடன் பெற்ற விவசாயிகளுக்கு குறிப்பிட்ட விகிதத்திலும் கடன் தள்ளுபடி செய்யப்படுவதாக முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு கண்டனம் தெரிவித்து நாகையை அடுத்த கீழ்வேளூரில் நேற்று காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் வயலில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், தமிழக அரசு மற்றும் முதல்வர் விஜய்க்கு எதிராக முழக்கங்களை எழுப்பிய அவர்கள், அனைத்து விவசாயக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

மேகேதாட்டு அணைக்கு எதிர்ப்பு

மேகேதாட்டுவில் அணை கட்டியே தீருவோம் என உறுதியுடன் உள்ளகர்நாடகதுணைமுதல்வர் சிவக்குமாருக்கு கண்டனம் தெரிவித்து, நாகை அருகே கீழ்வேளூர் கடைத்தெருவில் அவரது உருவபொம்மையை எரித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு அறிவித்துள்ள பயிர்க்கடன் தள்ளுபடி விவசாயிகளை ஏமாற்றும் திட்டம் என்றுகூறி தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் பந்தநல்லூர் பாலாரில் திருவள்ளுவர் விவசாயிகள் நலச்சங்கம் சார்பில் விவசாயிகள் நேற்று கையில் நெற்கதிர்களுடன் வரப்பில்நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சங்கத் தலைவர் கலைமணி தலைமை வகித்தார். பொறுப்பாளர்கள் சிவானந்தம், செல்வராஜ், சுந்தரமூர்த்தி உட்பட ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

கீழ்வேளூரில் நேற்று வயலில் இறங்கி போராட்டம் நடத்திய விவசாயிகள்.

மயிலாடுதுறை மாவட்டத்தில்

டாஸ்மாக் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

மயிலாடுதுறை/ கும்பகோணம்

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வாங்கும் விவகாரம் சமூக வலைதளங்களில் பெரும் சர்ச்சையாக கிளம்பியது.

இந்நிலையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆக்கூர், மூவலூர், சீர்காழி, பாலையூர் உட்பட பல டாஸ்மாக் கடைகளில் கூடுதல் விலைகேட்டதாக புகார் எழுந்ததால், டாஸ்மாக் ஊழியர்கள் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதனால், அதிர்ச்சியடைந்த டாஸ்மாக் ஊழியர்கள் மே 19-ம் தேதி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர். அதில், மதுபாட்டில்கள் திரும்பப் பெறுவதற்கு தனியாக பணியாளர்களை நியமிக்க வேண்டும், ஸ்டிக்கர் ஒட்டும் பணிக்கான செலவுகளை அரசே ஏற்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், கோரிக்கைகள் குறித்து அரசு தரப்பில் இருந்து எந்தவித பதிலும் வராததால், நேற்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 43 டாஸ்மாக் கடைகளையும் திறக்காமல், ஊழியர்கள் தஞ்சை மாவட்டம் திருபுவனத்தில் உள்ள டாஸ்மாக் மேலாளர் அலுவலகத்துக்கு மனு அளிக்க சென்றனர். இதையடுத்து, அதிகாரிகள் மாலை வரை பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் உடன்பாடு ஏற்பட்டு, 5.30 மணிக்கு டாஸ்மாக் கடைகளை திறந்தனர்.

இதற்கிடையே திருவிடைமருதூர் வட்டம் திருபுவனம் டாஸ்மாக் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக அலுவலகம் முன்பு நாகை- மயிலாடுதுறை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் அனைத்து சங்கங்கள் சார்பில் பணிபுறக்கணிப்பு ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

காரைக்காலில் எம்இபி மிஷன் சபை 250-வது ஆண்டு நிறைவு விழா

காரைக்கால்

காரைக்காலில் எம்இபி மிஷன் சபை 250-வது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது. பாரீஸ் அந்நிய வேத போதகர் குருக்கள்(எம்இபி) 331 பேர் 1776-ம் ஆண்டில் இந்தியா வந்து 250 ஆண்டுகள் நிறைவடைகிறது. இவர்கள் இந்தியாவில் சமுதாயப் பணி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபட்டவர்கள். இவர்களில் 9 பேர் புதுச்சேரி கடலூர் மறை மாவட்டத்தில் பணியாற்றியுள்ளனர்.

இவர்கள் இந்த நாட்டுக்கு வந்து சேவை செய்ததற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மறை மாவட்டங்களிலேயே முதல்முறையாக காரைக்காலில் நேற்று தூய தேற்றரவு அன்னை ஆலயம், தூய தேற்றரவு அன்னை மேல்நிலைப் பள்ளி வளாகம் ஆகியவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலை கொடியேற்றம் நடைபெற்றது. ஆலய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காரைக்கால் மறைவட்ட பங்கு குரு பி.பால்ராஜ்குமார் நிகழ்ச்சி நோக்கம் குறித்துப் பேசினார்.

தொடர்ந்து நடைபெற்ற அமர்வுகளில் புதுச்சேரி- கடலூர் மறை மாவட்ட அருட்பணியாளர் பேரருட்திரு அருள் புஷ்பம் அடிகள் கலந்துகொண்டு, அந்நிய வேத போதகர் குருக்கள் இந்தியாவுக்கு வருகை தந்தது குறித்தும், அவர்களது பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறினார். வேத போதகர் குருக்கள் புகைப்படங்களுடன் கூடிய கண்காட்சி தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. காரைக்கால் தெற்கு தொகுதி எம்எல்ஏ ஏ.எம்.எச்.நாஜிம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டார். பின்னர் ஆலயத்தில் திருப்பலி நடத்தப்பட்டு பங்கேற்றவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இணை பங்கு குரு சாமிநாதன் செல்வம், ஆன்மிக குரு பி.பன்னீர்ராஜா, சிறப்பு துணை குரு எல்.செல்வநாயகம், பங்குப் பேரவை துணைத் தலைவர்கள் எல்.எஸ்.பி.சோழசிங்கராயர், ஜான் அரேலியஸ், நெல்சன் உள்ளிட்ட ஏராளமான மக்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்புப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.ஸ்., மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

பொது

பூஜை / ஹோமம்

வேலூர் சத்துவாச்சாரி ஸ்ரீ கெங்கையம்மன் கோவில் திருவிழா இ தினேஷ் பாபு 9787075050.

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரெப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.16, தரைத்தளம், பிரிமியர் ஏவியோன், நியூ ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம், தமிழ்நாடு - 612001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1628210090000003 / 1.M/s.ஸ்ரீ இன்ஜினியரிங் ஒர்க்ஸ் 2.Mr.சந்திரன்.K 3.Mrs.மணிமேகலை	(i) 28.07.2021 & 27.07.2021 அன்றுள்ளபடி ₹ 45,49,299/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) (ii) அடையாளப்பூர்வ சுவாதீனம் - 16.03.2022 & நேரடி சுவாதீனம் - 29.09.2025	10.04.2026 அன்றுள்ளபடி ₹ 69,49,785/- (ரூபாய் அறுபத்தொன்பது லட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று எண்பத்தைந்து மட்டும்)	₹ 53,86,700/- (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எழுநூறு மட்டும்)	₹ 5,38,670/- (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பத்து எட்டாயிரத்து அறுநூற்று எழுபது மட்டும்)

சொத்து விவரம்: தஞ்சாவூர் சார்-பதிவு மாவட்டம், ஜாயிண்ட் எண்.1 சார்-பதிவகம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.6/8, புதிய சர்வே எண்.17/1 பகுதி, (TSLR-படி, புதுப்பட்டினம் கிராமம், வார்டு எண்.9, ப்ளாக் எண்.6, புதிய T.S.எண்.192, பழைய சர்வே எண்.17/1 பகுதி), **கதவு எண்.9, வார்டு எண்.6, "அண்ணா நகர்", விளார் ரோடு, 19வது தெரு, தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்** எனும் முகவரியில் கிழக்கு மேற்காக இரு பக்கமும் 30 அடி, தெற்கு வடக்காக இரு பக்கமும் 40 அடி **ஆக மொத்தம் 1200 சதுர அடி நிலம் அதிலுள்ள குடியிருப்பு கட்டிடம்,** அதனுடன் இணைந்த தண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ஆரோக்கியசாமி சொத்திற்கு வடக்கு, வாண்டையார் வீட்டு சொத்திற்கு கிழக்கு, சகுந்தலா & மற்றவர்கள் மனைக்கு மேற்கு, தெருவிற்கு தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 08.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 07.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 06.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன்** Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 27.05.2026, இடம்: பெங்களூரு — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்** — ஒப்பம்/-

பெருநகர சென்னை மாநகராட்சி
கட்டடத்துறை க.து.ந.க.எண்.பி1/1480/2026

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)
கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

House Keeping Work at Ripon Building Campus Zone – 05 (Re-Tender) Procurment of Stainless Steel Dog Cage (Foldable Type) and Dog Kennels for Animal Birth Control Centre in Zone - 07 (Under Capital & Municipal Fund)

1. பணியின் மதிப்பு ரூ. 65,02,560/- முன்வைப்பு தொகை ரூ. 66,000/-
2. பணியின் மதிப்பு ரூ. 72,88,136/- முன்வைப்பு தொகை ரூ. 73,000/-

மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்
ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **17.06.2026** அன்று பிற்பகல் **3.00 P.M** மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **18.06.2026** அன்று பிற்பகல் **11.00 A.M** மணி

செ.ம.தொ.இ./ 1952 /ஒப்பந்தப்புள்ளி/2026 — **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by Venkatesan K at THG PUBLISHING PVT.LTD. Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CM YK TY-DE